Build Future ..... Restore Past

# செயலாற்றுகை அறிக்கை - 2015



கட்டிடத்திணைக்களம்

வீடமைப்பு

மற்றும்நிர்மாணத்துறை

அமைச்சு

## பொருளடக்கம்


அறிமுகம்....3
நிறுவனத் தகவல்கள் ....3
தொலை நோக்கு....4
செயற்பணி....4
தரக் கொள்கை ....4
அதிகாரமும், பொறுப்பும்....5
திணைக்களத்தின் உத்தரவாதம்....5
முகாமைத்துவம்....6
ஆற்றப்படுகின்ற சேவைகள்....7
பிராந்திய அலுவலகங்கள் ....8
பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை 2015 ....9
2015 ஆம் ஆண்டு வரையான முன்னைய செயலாற்றுகை .... 10
2015 ஆம் ஆண்டின் கருத்திட்டங்களின் சுருக்கம் .... 11
ஆலோசனைப் பிரிவின் செயலாற்றுகை .... 12
மூலதன மற்றும் மீண்டெழும் செலவினம் - 2015.... 13
முற்பணக் கணக்கின் உண்மையான வரையறைகளுடன் ஒப்பிடுகையில் சிபாரிசு செய்யப்பட்ட வரையறைகள் - 2015.... 13
வருடாந்த செயற்றிட்டத்தின் செயலாற்றுகை - 2015.... 14
உத்தேச வருடாந்த செயற்றிட்ட நிகழ்வின் செயலாற்றுகை - 2016.... 15
பிராந்திய செயலாற்றுகை.... 16
வலயம் 1 நிர்மாணிப்பு .... 16
செயலாற்றுகை.... 16
பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் .... 16
வலயம் 1 பராமரிப்பு.... 17
செயலாற்றுகை.... 17
பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் .... 17
வலயம் 2 .... 18
செயலாற்றுகை.... 18
பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் .... 18
வலயம் 3 .... 19
செயலாற்றுகை.... 19

பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் ........ 19

வலயம் 4 ........ 20

செயலாற்றுகை ........ 20

பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் ........ 20

வலயம் 5 ........ 21

செயலாற்றுகை ........ 21

பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் ........ 21

வலயம் 6 ........ 22

செயலாற்றுகை ........ 22

பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் ........ 22

மனித வளம் ........ 23
மனித வளம் - சக்தி ........ 24
பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் கூற்று ........ 25
தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ........ 26

# தோற்றப்பாடுகள்

## அறிமுகம்


அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வந்த கட்டிடத் திணைக்களமானது 1969 ஆம் ஆண்டில் சுயாதீனமான நிறுவனமொன்றாக ஸ்தாபிக்கப்பட்டதுடன், கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குப் பொறுப்புக்கூற வேண்டிய சுயாதீன நிறுவனமாக அது நான்கு தசாப்தகாலத்திற்கும் மேலாக செயற்பட்டு வருகின்றது. கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் அது சம்பந்தமான உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் ஒரே அதிகார அமைப்பாகவும், ஆலோசனை நிறுவனமாகவும் கட்டிடத் திணைக்களம் உள்ளது. கட்டிட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் பல்வேறு விடயங்களின் போது நிபுணத்துவ ஆலோசனை வழங்குவதிலும் இத்திணைக்களம் பிரபல்யமடைந்துள்ளது.

நிதிப் பிரமாணம், திறைசேரியின் பல்வேறு சுற்றறிக்கைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களில் இந்தத் திணைக்களத்தின் பணிகள் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. தேசிய அபிவிருத்தியின் போது மற்றும் அரசாங்க கட்டிட சொத்துக்களைப் பாதுகாக்கும் போது திணைக்களம் பாராட்டத்தக்கவாறான செயற்பணியை நிறைவேற்றுகின்றது.

பதின் மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை அடுத்து கட்டிடத் திணைக்களம் மறுசீரமைக்கப்பட்டது. இலங்கையில் அரசாங்கத்தின் கட்டிடங்களைத் திட்டமிடல் மற்றும் நிர்மாணிக்கும் அதிகாரம் மற்றும் பொறுப்பைக் கொண்ட திணைக்களமாக உள்ளதுடன், ISO 9001:2008 தரச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளது. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப வகைப்பொறுப்புக்கூறல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி இத்திணைக்களமானது தமது செயற்பணியை மீண்டும் வரைவிலக்கணம் செய்துள்ளது.

## நிறுவனத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | - | கட்டிடத் திணைக்களம் |
| சட்டரீதியான அந்தஸ்து | - | அரசாங்கத்திற்கு முழு உரித்துடையது |
| அமைச்சு | - | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை |
| அலுவலகம் | - | இரண்டாம் மாடி |
| | | செத்சிறிபாய, பத்தரமுல்லை |
| | | இலங்கை |
| | | தொலைபேசி இல. : 94 11 2862588<br>பெக்ஸ் இல. : 94 11864771 |
| | | மின்னஞ்சல் : dgb@buildingsdept.gov.lk |
| | | இணையத்தளம் : www.buildingsdept.gov.lk |



தொலை நோக்கு

செயற்பணி

கொள்கை

## தொலை நோக்கு

“தேசத்திற்கு தரம்மிக்க உயர் மட்டத்திலான சேவையை பெற்றுக் கொடுப்பதற்கான அரசதுறைக்கு உரித்தான பாதுகாப்பானதும், சிக்கனமானதும், நிலைபேறானதும், சிறந்த வடிவிலுமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடச் சூழல் இருப்பதை உறுதி செய்வதற்காக கட்டிட நிர்மாணிப்பு பணிகளின் தொழில்நுட்பரீதியான அதிகார அமைப்பாக மாறுதல்.”

## செயற்பணி

“அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற, பல்வேறு துறைகளில் நிபுணத்துவம்மிக்க, தொழில்சார் வல்லுனர் குழுவினால், சம்பந்தப்பட்ட தரப்பினர்களை பூரணமாக திருப்திப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ரீதியான வகைப்பொறுப்புக்கூறல், சிக்கனம், செயற்பாடு மற்றும் சிறந்த தரத்தை உறுதி செய்து கட்டிடக் கலை ரீதியான திட்டங்கள், பொறியியல் திட்டங்கள், நிர்மாணிப்பு, பராமரிப்பு நடவடிக்கைகள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அரச துறையின் கட்டிட நிர்மாணப் பணிகளை மேம்படுத்துவதற்கான சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுத்தல்.”

## தரக் கொள்கை

- எதிர்பார்க்கப்பட்ட அளவையும் தாண்டி தொழில்சார் சேவைகளை வழங்குவதன் மூலம் சேவை பெறுவோரை திருப்திப்படுத்தல்,
- மனிதனினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறந்த சூழலை அடைந்துகொள்வதற்கான நியாயாதிக்க, ஒழுங்குறுத்தல் தேவைகள் மற்றும் உரிய நியமங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்,
- கண்காணிப்பு, வாடிக்கையாளர் பின்னூட்டல் மற்றும் அறிவை இற்றைப்படுத்துவதன் மூலம் எமது சேவைகளை தொடர்ச்சியாக மேம்படுத்துவது தொட்பில் கவனம் செலுத்தல்,
- கூட்டு உணர்வுடன் நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் எமது அர்ப்பணிப்பு, பல்துறைசார் தொழில்வல்லுனர்களின் பூரண பங்கேட்பு,
- ISO 9001:2008 தர முகாமைத்துவக் கட்டமைப்பின் தேவைகளுக்கு இசைவாக செயற்பட்டு தர முகாமைத்துவக் கட்டமைப்பை தொடர்ச்சியாக மேம்படுத்துவதன் மூலம்,

அரச துறையில் கட்டிட அபிவிருத்திக்கு பொறுப்புக்கூற வேண்டிய முன்னோடி அரச நிறுவனமாக கட்டிடத் திணைக்களம் செயற்படுகின்றது.

அதிகாரம்

## அதிகாரமும், பொறுப்பும்

நிதிப் பிரமாணம் 787, 788, 789 மற்றும் 790 இன் கீழ் கட்டிடத் திணைக்களத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தொழில்நுட்பம்சாரா திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு இத்திணைக்களம் கட்டுப்பட்டுள்ளது.

- ➢ அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செலவுத் தலைப்புக்களின் ஊடாக வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களுக்கு அமைய கட்டடங்களின் மதிப்பீடுகள் மற்றும் நிர்மாணிப்புத்திட்டமிடல் மற்றும் அது தொடர்பான வசதிகளைத் திட்டமிடல்.
- ➢ கட்டடத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களுக்கு அமைய கட்டடங்களின் மதிப்பீடுகள் மற்றும் நிர்மாணிப்புத்திட்டமிடல் மற்றும் அது தொடர்பான வசதிகளைத்திட்டமிடல்.
- ➢ நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அரசதுறை நிறுவனங்களுக்கு மதியுரைச் சேவைகள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ➢ அரசாங்க கட்டடங்களில் மேற்கொள்ளும் பராமரிப்பு, மேலதிகப் பகுதிகளை ஒன்றிணைத்தல் மற்றும் மேம்படுத்தல்.
- ➢ அரசாங்க வைத்தியசாலைகளின் மலசல கழிவகற்றல் கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அவை முறையாக இடம்பெற்று வருவதை உறுதி செய்து கொள்ளல்.
- ➢ அரசாங்க வீடுகளின் பராமரிப்பும், அவற்றைப் பேணிவருவதும்.
- ➢ திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல வகையிலுமான நிர்மாணிப்புப் பணிகள் தொடர்பாகவும் தொழில்நுட்ப வகைப்பொறுப்புக்கூறுவதை உறுதி செய்தல்.
- ➢ வெளிநாட்டுத் தூதுக் குழுக்களின் கருத்திட்டங்களுக்கு பொறியியல்சார் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்

உத்தரவாதம்

## திணைக்களத்தின் உத்தரவாதம்

சேவை பெறுநரின் தொழில்நுட்பரீதியான மற்றும் முகாமைத்துவ கொள்ளளவைக் கவனத்தில் கொண்டு கட்டிடத் திணைக்களம் பூரணமான செயல்ரீதியான மற்றும் நடைமுறைசார் உதவியை வழங்குகின்றது. நிர்மாணிப்புக்கான உறுதிப்படுத்தல தேவைப்பாட்டை நாம் மதிப்பதுடன், அதன் மூலம் அபாயத்தைக் குறைத்துக் கொள்வதற்கான பொறுப்பும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

- தொழில்நுட்ப மற்றும் நிதிசார் ரீதியில் ஆயுட்காலம் முழுவதற்கும் வகைப்பொறுப்புக்கூறல்.
- உச்சளவான தகைமைகளைக் கொண்டுள்ள தொழில் வல்லுனர்களினால் கட்டிடங்கள் திட்டமிடப்படல்.
- அனைத்துச் சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் தரங்கள், பாதுகாப்புத் தரநியமங்களைப் பின்பற்றல்.
- முன்னைய அனுபவத்தைப் பயன்படுத்தி குறிப்பாக அபிவிருத்தி செய்யப்பட்ட மிகவும் சரியான விடயப்பரப்பு.
- திட்டங்கள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவோரின் ஆவணங்களை கவனமாக ஆராய்வதன் மூலம் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- ஒப்பந்த முகாமைத்துவம்.
- அனுபவம் மிக்க பூரணமான தொழில்சார் கருத்திட்ட முகாமைத்துவச் சேவைகள் ஊடாக பெறுமானத்தை உறுதிசெய்தல்.
- முகாமைத்துவக் கணக்காய்வின் சிக்கலான நிலைமைகள் தொடர்பில் உதவுதல்.
- உடன்படிக்கைசார்ந்த வழக்குகளைத் தொடருவது சம்பந்தமான உதவிகளை வழங்குதல்.
- தொழில்நுட்ப ரீதியான மதிப்பீடு மற்றும் வழங்கல் குழுக்களுக்கு உதவுவதன் மூலம் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொடுத்தல்.

**பெறுமதி**

தொழில்நுட்ப மற்றும் நிதிசார் அடிப்படையில் பொறுப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் சேவைபெறுநர் எதிர்நோக்குகினள்ற அபாயங்களை கட்டிடத் திணைக்களம் குறைத்து தாம் மேற்கொள்ளும் நிர்மாணிப்புக்களுக்கான பெறுமதியை உறுதி செய்து சேவை பெறுநருக்கு ஆயுட் காலம் முழுவதிலும் நிலைத்திருப்பதை உறுதிசெய்வதும் பெற்றுக் கொடுக்கப்படும்.

## முகாமைத்துவம்

முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| பொறியியலாளர் எம்.ஆர். ஜெயசந்திரன் | - | பணிப்பாளர் நாயகம் |
| பொறியியலாளர் எம்.பி. ஹேமதாச | - | பதில் பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவைகள்) |
| கட்டிடக் கலைஞர் திருமதி சந்தியா மெண்டிஸ் | - | பதில் பணிப்பாளர் நாயகம் (ஆலோசனைச் சேவைகள்) |
| பொறியியலாளர் எம்.எச்.எம். இஸ்மாயில் | - | பணிப்பாளர் (பொறியியல் திட்டமிடல்) |
| எஸ்.டி. ஸ்ரீமாலி அதாவுதஆரச்சி | - | பணிப்பாளர் (நிருவாகம்) |
| திருமதி ஜே.ஏ. கோ்லி | - | பிரதம கணக்காளர் |
| பொறியியலாளர் டபிள்யு.ஏ.டபிள்யு. அபயவர்த்தன | - | பணிப்பாளர் (நிர்மாணம் - வலயம் 1) |
| பொறியியலாளர் ஏ. நவாஸ் ஆதம் | - | பணிப்பாளர் (நிர்மாணம் - வலயம் 11) |
| பொறியியலாளர் திருமதி கே.ஜி. சந்தியா குமுதினி | - | பணிப்பாளர் (தொழில்நுட்ப அபிவிருத்தி) |
| செல்வி எஸ். நரசிங்க | - | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| கட்டிடக் கலைஞர் மேனக மங்களநாத | - | பதில் பணிப்பாளர் (கட்டிடக் கலை) |

சேவைகள்

## ஆற்றப்படுகின்ற சேவைகள்

சேவை பெறுநரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கட்டிடத் திணைக்களம் சேவைகளை ஆற்றிவருவதுடன், அவர்கள் தமது இலக்குகளை அடைந்துகொள்ளும் போது, அதாவது, கட்டிடங்கள், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது அவர்கள் எதிர்நோக்குகின்ற கொள்ளளவுசார்ந்த இடைவெளி இதன் மூலம் நிரப்பப்படுகின்றது.

**கருத்திட்டப் பிரேரணைகள்** (செயற்பணியாக இருப்பது சேவைபெறுநர் இனங்கண்டுள்ள கருத்திட்டங்களுக்கான வசதிகளைச் செய்துகொடுப்பதாகும்.)

சேவை பெறுநருக்கு தமது கருத்திட்டங்களுக்கான அங்கீகாரங்கள் மற்றும் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கருத்திட்டப் பொழிப்பு, சாத்தியக்கூறு அறிக்கைகள், செலவின மதிப்பீடுகளைத் தயார் செய்தல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதை நாம் பொறுப்பேற்றுக் கொள்கின்றோம்.

**செயற்பொறுப்பு (செயற்பணி தொழில்முயற்சிசார் கருத்திட்ட முகாமையாளராவார்)**

திட்டமிடல் முதல் நிறைவு செய்வது வரையான ஒட்டுமொத்தப் பொறுப்பையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம். சேவை பெறுநர் மேற்கொள்ள வேண்டியிருப்பது பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டத்தைக் கையேற்பது மாத்திரமாகும்.

நிதி ஒழுங்குவிதிகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளவாறு, செலவுத் தலைப்பு அல்லது கட்டிடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வரையப்பட்ட காசோலையை சாட்டுதல் செய்வதன் மூலம் நிதியை கட்டிடத் திணைக்களத்திற்கு விடுவிக்க வேண்டும்.

**ஆலோசனை** (செயற்பணி நிறைவேற்றுக் கருத்திட்ட முகாமையாளர் ஆவார்)

முன்னைய ஒப்பந்தப் பொறுப்பு என்ற வகையில் சாத்தியக்கூறுக் கற்கை, திட்டமிடல், கனிய அளவைப்பத்திரம் மற்றும் விலைமனு ஆவணங்கள் போன்றவற்றைத் தயார் செய்வதற்கு மற்றும் பிந்திய ஒப்பந்தப் பொறுப்பு என்ற வகையில் நிர்மாண முகாமைத்துவச் சேவைகளை நிறைவேற்றுவதை நாம் பொறுப்பேற்றுக் கொள்கின்றோம். விலைமனுச் செயன்முறையின் பொறுப்பு சேவை பெறுநருக்கு உரித்தானதாகும்.

நிதிகளை சேவைபெறுநர் தடுத்துவைத்திருப்பதுடன், நிர்மாணப் பணிகளுக்கான கொடுப்பனவுகளை சேவைபெறுநர் மேற்கொள்ளல் வேண்டும்.

**கருத்திட்ட முகாமைத்துவம்** (செயற்பணி நிறைவேற்று / ஆலோசனைக் கருத்திட்ட முகாமையாளராக இருத்தல் வேண்டும்)

ஆலோசனை மற்றும் ஒப்பந்த முகவராண்மை நிறுவனங்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பை நாம் பொறுப்பேற்றுக் கொள்கின்றோம் என்பதுடன், கருத்திட்டங்களை அமுல்படுத்தல் அல்லது சேவை பெறுநருக்கு ஆலோசனை வழங்குவதையும் நாம் மேற்கொள்கின்றோம். தனியார் துறையின் நி.செ.கை., நி.செ.செ.கை. முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், அரசாங்க அல்லது உதவிக் கொடை நிறுவனங்களினால் திட்டமிட்டு நிர்மாணிக்கும் ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதையும் நாம் பொறுப்பேற்கின்றோம்.

நிதியினை சேவைபெறுநர் தடுத்துவைத்திருப்பதுடன், நிர்மாணப் பணிகளுக்கான கொடுப்பனவுகள் சேவை பெறுநரினால் மேற்கொள்ளப்படும்.

**பராமரிப்பு, விசேட புதுப்பித்தல்கள், மேம்படுத்தல்கள்** (சேவைபெறுநருக்கு வசதிகளை செய்துகொடுக்கும் செயற்பணி)

நிலைமை அறிக்கை, பராமரிப்பு துண்டுப்பிரசுரங்கள், பராமரிப்பு மதிப்பீடுகளைத் தயார் செய்தல், பராமரிப்பு நடவடிக்கைகள், கட்டிடங்களை மறுசீரமைத்தல், உட்கட்டமைப்பு வசதி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதையும் நாம் மேற்கொள்கின்றோம்.


**ஆற்றப்படும் ஏனைய சேவைகள்**

அங்கத்தவர்களாக நிபுணத்துவம்பெற்றுள்ள அலுவலர்களை நியமனம் செய்வதன் மூலம் ஏனைய நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் நாம் பங்கேற்கின்றோம்.

சேவைகள்

"நாட்டின் ஆறு இடங்களில் அமைந்துள்ள ஏழு வலய அலுவலகங்களினூடாக கட்டிடத் திணைக்களம் தமது சேவைகளை சேவை பெறுநர்களுக்கு ஆற்றிவருகின்றது".

## பிராந்திய அலுவலகங்கள்




*வரைபடம் 1: பிராந்திய அலுவலகங்கள்*

**அடையாள விபரம்**

வலயம் 1 – நிர்மாணிப்பு (ரொரின்ரன், கொழும்பு)

வலயம் 1 – பராமரிப்பு (ரொரின்ரன், கொழும்பு)

வலயம் 2 – (யாழ்ப்பாணம்)

வலயம் 3 – (குருநாகல்)

வலயம் 4 – (அம்பாறை)

வலயம் 5 – (கண்டி)

வலயம் 6 – (காலி)

## பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை 2015

## தேசிய அபிவிருத்திக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு

**நாட்டினுள் நிர்மாணிப்புத் துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இந்தத் திணைக்களத்தின் பூரண பங்களிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது. நிர்மாணிப்பு ஒப்பந்தங்களுக்குத் தேவையான கருத்திட்ட முகாமைத்துவச் சேவைகளை அதிகளவில் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பு திணைக்களத்திற்குக் கிடைத்தது.**

## ISO 9001:2008 தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல்

கட்டடத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் (வலயம் 5 ) பிரதம பொறியியலாளர் அலுவலகத்தினால் ISO 9001:2008 தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டது.

ஏனைய பிரதேச ரீதியான அலுவலகங்களும் ISO தரச்சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குரிய ஆவணங்களை ஆயத்தம் செய்து வருகின்றன

## முன்னேற்றப் பொழிப்பு

**2015 ஆம் ஆண்டின் உத்தேச பெறுமானங்களுக்கு இசைவாக ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்ற விகிதம் 76.00% ஆகும்.**


## 2015ஆம் ஆண்டு எதிர்நோக்கிய தடைகள்

- பதவியணிப் பற்றாக்குறை
    - பொறியியலாளர்கள், கட்டடக் கலைஞர்கள் மற்றும் கனிய அளவையாளர்கள்
    - தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் திட்டமிடலாளர்கள்
    - அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள்
    - சாரதிகள்
- வேலைத்தளங்களுக்குச் செல்வதற்கான வாகனங்கள் பற்றாக்குறையாக உள்ளமை.
- அவசர கருத்திட்டங்களுக்கு கடமைகளைப் பொறுப்பளிப்பதன் அடிப்படையில் மதியுரைச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள அங்கீகாரம் இல்லாமை.
- சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு ஃமேம்படுத்தல்களுக்குப் போதியளவு ஒதுக்கங்கள் இல்லாமை.
- இடைநிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படாமை. (திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர்)
- நிர்மாணிப்புக் கட்டத்தின் போது சேவை பெறுநர்கள் கோருகின்ற திருத்தங்கள் காரணமாக கருத்திட்டங்கள் தாமதமடைதல்.
- ஒப்பந்ததாரர்களிடம் போதியளவு வளங்கள் இல்லாமை காரணமாக கருத்திட்டங்களை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதிலுள்ள அசௌகரியங்கள்.

பொறியியலாளர் எம்.ஆர். ஜெயச்சந்திரன்

கட்டடப் பணிப்பாளர் நாயகம்

## 2015 ஆம் ஆண்டு வரையான முன்னைய செயலாற்றுகை




*வரைபடம் 2: கடந்த ஐந்து ஆண்டுகளுடனான ஒப்பீடு*

கட்டிடத் திணைக்களமானது, அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச துறை நிறுவனங்களுக்குச் சேவைகளை ஆற்றிவருகின்றது. திணைக்களத்தினால் ஆற்றப்படுகின்ற பிரதான சேவைகள், புதிய கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. முதலாவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 2010 ஆம் ஆண்டு ரூ.மி. 516 ஆக காணப்பட்ட செயலாற்றுகையானது, 2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 2303 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 2010 முதல் 2015 வரையான செயலாற்றுகையின் வளர்ச்சியானது **346%** ஆகும். 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான வருடாந்த முன்னேற்றம் முதலாவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

*அட்டவணை 1: 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான வருடாந்த முன்னேற்றம்*

| ஆண்டு | வருடாந்த செயலாற்றுகை (ரூ.மி.) | % அதிகரிப்பு (2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்) | % அதிகரிப்பு (முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்) |
|---|---|---|---|
| **2010** | 516.42 | | |
| **2011** | 632.95 | 23% | 23% |
| **2012** | 621.12 | 20% | -2% |
| **2013** | 1339.22 | 159% | 115% |
| **2014** | 1523.01 | 195% | 14% |
| **2015** | 2303.81 | 346% | 51% |

முதலாவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 2014 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை திணைக்களமானது தமது செயலாற்றுகையை ரூ.மி. 1523 முதல் ரூ.மி. 2303 வரை வளர்த்துக் கொண்டுள்ளது. புனரமைப்பு மற்றும் புதிய கட்டிடங்கள் தொடர்பிலான செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ள இரண்டாவது

அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2014 முதல் 2015 வரை புனரமைப்புக் கருத்திட்டங்களின் செயலாற்றுகை **5%**இனாலும் கட்டிடங்களின் செயலாற்றுகை **65%**இனாலும் வளர்ச்சியடைந்துள்ளது.

*அட்டவணை 2: வருடாந்த செயலாற்றுகையை துறைசார் அடிப்படையில் ஒப்பிடல்*

| துறை | வருடாந்த செயலாற்றுகை (ரூ.மி.) | | விகிதாசார வளர்ச்சி |
|---|---|---|---|
| | 2014 | 2015 | |
| **புனரமைப்பு** | 344.80 | 363.13 | 5% |
| **புதிய கட்டிடங்கள்** | 1178.21 | 1940.68 | 65% |
| **மொத்தம்** | **1523.01** | **2303.81** | **51%** |

## 2015 ஆம் ஆண்டின் கருத்திட்டங்களின் சுருக்கம்

மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டில் 283 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் கருத்திட்டச் செலவினம் ரூபா மில்லியன் 25 வரை 198 கருத்திட்டங்களும், கருத்திட்டச் செலவினம் ரூபா மில்லியன் 25-100 வரையான 45 கருத்திட்டங்களும், கருத்திட்டச் செலவினம் ரூபா மில்லியன் (100-200) வரையான 18 கருத்திட்டங்களும் 200 ரூபா மில்லியனுக்கு மேற்பட்ட கருத்திட்டங்கள் 22 உம் உள்ளடங்கும்.

*அட்டவணை 3: 2015 ஆம் ஆண்டின் நிர்மாணப் பிரிவின் கருத்திட்டப் பொழிப்பு*

| வலய அலுவலகம் | கருத்திட்டப் பெறுமதி (ரூ.மி.) | | | | |
|---|---|---|---|---|---|
| | 0-25 | 25-100 | 100-200 | ,200 | வுழவயட |
| **வலயம் 1 நிர்மாணிப்பு** | 5 | 11 | 4 | 4 | 24 |
| **வலயம் 1 பராமரிப்பு** | 62 | 2 | 1 | 1 | 66 |
| **வலயம் 2** | 12 | 9 | 2 | 4 | 27 |
| **வலயம் 3** | 14 | 7 | 3 | 3 | 27 |
| **வலயம் 4** | 51 | 10 | 2 | 5 | 68 |
| **வலயம் 5** | 34 | 4 | 2 | 2 | 42 |
| **வலயம் 6** | 20 | 2 | 4 | 3 | 29 |
| **மொத்தம்** | **198** | **45** | **18** | **22** | **283** |


## ஆலோசனைப் பிரிவின் செயலாற்றுகை

ஆலோசனைச் சேவைகள் பிரிவானது திணைக்களத்தினால் ஆற்றப்படுகின்ற சேவைகளின் மத்திய நிலையமாக இருப்பதுடன், மேற்படி பிரிவானது இவற்றில் கட்டிடங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட கட்டிடக் கலை, கட்டமைப்புசார், மின்சாரம், நீர் விநியோகம், வடிகாலமைப்பு, பொறியியல், திட்டமிடல் மற்றும் கனிய அளவைப்பத்திரங்களைத் தயார் செய்வதை மேற்கொள்கின்றது. மேற்படி சகல சேவைகளும் ஆற்றப்படுவது தொழில்சார் மட்டத்திலான தகைமைகளைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்களின் பூரண கண்காணிப்பின் கீழாகும் என்பது விசேட அம்சமாகும். 2013 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 2700 ஆகக் காணப்பட்ட ஆலோசனைப் பிரிவின் செயலாற்றுகை, 2014 ஆம் ஆண்டளவில் ரூபா மில்லியன் 3308 ஆகவும், 2014 ஆம் ஆண்டளவில் ரூ.மி. 4342 ஆகவும் அதிகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை கீழே அட்டவணை 4 இல் தரப்பட்டுள்ளதுடன், 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஆலோசனை சேவைகள் பிரிவின் செயலாற்றுகை மூன்றாவது வரைபின் மூலம் தரப்பட்டுள்ளது.

*அட்டவணை 4: 2015 ஆம் ஆண்டின் ஆலோசனை சேவைகள் பிரிவின் கருத்திட்டங்களின் பொழிப்பு*


| இலக்கம் | விபரம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ரூ.மி. |
|---|---|---|---|
| 1 | திட்டமிடல் கட்டமானது பூர்த்தி செய்யப்பட் கருத்திட்டங்கள் | 74 | |
| 2 | சேவை பெறுநரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட திட்டங்கள் | 111 | |
| 3 | நிர்மாணத் திட்டமிடல் கட்டத்தில் காணப்பட்ட கருத்திட்டங்கள் | 20 | |
| 4 | 2015 ஆம் ஆண்டின் இறுதியில் தயார் செய்துவந்த பருமட்டான திட்டங்கள் | 19 | |
| 5 | 2015 ஆம் ஆண்டின் இறுதியில் பரிசீலனை மட்டத்தில் காணப்பட்ட கருத்திட்டங்கள் | 26 | |
| 6 | கருத்திட்ட முகாமைத்துவ ஆலோசனைக் பணி | 06 | |
| | **மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை** | **256** | **4342.00** |




| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| இலக்கு (ரூ.மில்லியன்.) | 0 | 3240 | 3900 |
| உண்மை (ரூ.மில்லியன்.) | 2700 | 3308 | 4342 |

*வரைபடம் 3: ஆலோசனைச் சேவைகள் பிரிவின் செயலாற்றுகையை வெளிப்படுத்துகின்றது*


## மூலதன மற்றும் மீண்டெழும் செலவினம் - 2015




| | மூலதன வரவு செலவு | மேலதிக வரவு செலவு | மொத்தம் |
|---|---|---|---|
| வருட உத்தேசம்(ரூ.மில்லியன்) | 52.40 | 254.60 | 307.00 |
| துணை ஒதுக்கீடு | 0.00 | 38.30 | 38.30 |
| மொத்தம் (ரூ.மில்லியன்) | 52.40 | 292.90 | 345.30 |
| செலவு | 52.22 | 286.73 | 338.96 |

*வரைபடம் 4: மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விபரம் - 2015*

## முற்பணக் கணக்கின் உண்மையான வரையறைகளுடன் ஒப்பிடுகையில் சிபாரிசு செய்யப்பட்ட வரையறைகள் - 2015




| | செலவீன உயர்ந்தபட்ச எல்லை | பெற்றுக்கொண்ட குறைந்தபட்ச எல்லை | உயர்ந்த பட்ச பற்று |
|---|---|---|---|
| திட்டமிடப்பட்ட எல்லை | 20.00 | 9.00 | 95.00 |
| பெற்றுக்கொண்ட எல்லை | 20.87 | 11.87 | 75.00 |
| உண்மை செலவீனம் பெற்றுக்கொண்டவை | 15.92 | 17.87 | 43.52 |

*வரைபடம் 5: முற்பணக் கணக்கின் உண்மையான வரையறைகளுடன் ஒப்பிடுகையில் சிபாரிசு செய்யப்பட்ட வரையறைகள் பற்றிய விபரம்*

## வருடாந்த செயற்றிட்டத்தின் செயலாற்றுகை - 2015

| | | செயற்பணி | | ஆலோசனை | | கருத்திட்ட முகாமைத்துவக் கடன் | | பராமரிப்பு | | மேம்படுத்தல் | | மறுசீரமைப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % |
| **வலயம் 1 நிர்மாணம்** | இலக்கு | 109.66 | 100 | 243.71 | 100 | 148.91 | 100 | - | - | - | - | - | - | **502.28** | **100** |
| | உண்மை | 97.85 | 74 | 154.63 | 48 | 129.20 | 28 | - | - | - | - | - | - | **381.68** | **48** |
| **வலயம் 1 பராமரிப்பு** | இலக்கு | 11.31 | 100 | 79.62 | 100 | - | - | 21.33 | 100 | 226.24 | 100 | 38.04 | 100 | **376.54** | **100** |
| | உண்மை | 12.21 | 79 | 65.00 | 75 | - | - | 24.77 | 100 | 187.88 | 85 | 36.62 | 38 | **326.48** | **79** |
| **வலயம் 2** | இலக்கு | 116.55 | 100 | 197.11 | 100 | 275.15 | 100 | - | - | - | - | - | - | **588.81** | **100** |
| | உண்மை | 104.96 | 94 | 133.13 | 40 | 262.20 | 95 | 6.15 | 100 | - | - | - | - | **506.44** | **80** |
| **வலயம் 3** | இலக்கு | 167.00 | 100 | 86.86 | 100 | - | - | 11.92 | 100 | 22.86 | 100 | 3.41 | 100 | **292.05** | **100** |
| | உண்மை | 127.80 | 76 | 58.60 | 66 | - | - | 12.57 | 100 | 18.68 | 87 | 2.00 | 56 | **219.65** | **75** |
| **வலயம் 4** | இலக்கு | 80.43 | 100 | 428.49 | 100 | 75 | 100 | - | - | - | - | - | - | **583.92** | **100** |
| | உண்மை | 39.45 | 49 | 194.81 | 45 | 69 | 91 | - | - | - | - | - | - | **303.26** | **56** |
| **வலயம் 5** | இலக்கு | 143.81 | 100 | 116.05 | 100 | 128.84 | 100 | 33.12 | 100 | - | - | - | - | **421.82** | **100** |
| | உண்மை | 162.23 | 97 | 123.23 | 100 | 60.00 | 47 | 38.67 | 100 | - | - | - | - | **384.13** | **90** |
| **வலயம் 6** | இலக்கு | 50.00 | 100 | - | - | 150.00 | 100 | 35.24 | 100 | 6.96 | 100 | - | - | **242.20** | **100** |
| | உண்மை | 39.68 | 79 | - | - | 106.71 | 53 | 35.43 | 100 | 0.96 | 10 | - | - | **182.78** | **68** |
| **மொத்தம்** | இலக்கு | 678.76 | 100 | 1151.84 | 100 | 777.90 | 100 | 101.60 | 100 | 256.06 | 100 | 41.45 | 100 | **3002.28** | **100** |
| | உண்மை | 584.18 | 83 | 729.40 | 58 | 627.11 | 69 | 111.65 | 100 | 207.52 | 84 | 38.62 | 39 | **2303.81** | **76** |


## உத்தேச வருடாந்த செயற்றிட்ட நிகழ்வின் செயலாற்றுகை - 2016

| | | செயற்பணி | | ஆலோசனை | | கருத்திட்ட முகாமைத்துவக் கடன் | | பராமரிப்பு | | மேம்படுத்தல் | | மறுசீரமைப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % | நிதி (ரூ.மி.) | பௌ. % |
| **வலயம் 1 நிர்மாணம்** | இலக்கு | 138.95 | 100 | 1451.24 | 100 | - | - | - | - | - | - | - | - | 1590.19 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |
| **வலயம் 1 பராமரிப்பு** | இலக்கு | 3.14 | 100 | 28.14 | 100 | - | - | 19.02 | 100 | 77.92 | 100 | 105.27 | 100 | 233.49 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |
| **வலயம் 2** | இலக்கு | 110.40 | 100 | 590.57 | 100 | 60.50 | 100 | - | - | - | - | - | - | 761.47 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |
| **வலயம் 3** | இலக்கு | 197.10 | 100 | 380.88 | 100 | - | - | 61.87 | 100 | 1.00 | 100 | - | - | 620.85 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |
| **வலயம் 4** | இலக்கு | 245.74 | 100 | 265.90 | 100 | 108.44 | 100 | - | - | - | - | - | - | 620.08 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |
| **வலயம் 5** | இலக்கு | 90.91 | 100 | 118.79 | 100 | 68.84 | 100 | 26.09 | 100 | - | - | - | - | 304.23 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |
| **வலயம் 6** | இலக்கு | 88.92 | 100 | 30.00 | 100 | 326.09 | 100 | 21.87 | 100 | - | - | - | - | 466.89 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |
| **மொத்தம்** | இலக்கு | 874.76 | | 2845.52 | | 563.87 | | 128.85 | | 78.92 | | 105.27 | | 4597.19 | 100 |
| | உண்மை | | | | | | | | | | | | | | |

# பிராந்திய செயலாற்றுகை

## வலயம் 1 நிர்மாணிப்பு

| | |
|---|---|
| பிரதம் பொறியியலாளர் | பொறியியலாளர் எஸ்எஸ். ரனவத்த |
| பிரதிப் பிரதம் பொறியியலாளர் | பொறியியலாளர் ஜி.எச்.என்.என். பெரேரா |
| அலுவலகம் | பிரதம் பொறியியலாளர் (வலயம் 1 நிர்மாணிப்பு) அலுவலகம்,<br>இல. 213,<br>ரொரின்ரன் எவனியு,<br>கொழும்பு 07 |
| தொலைபேசி 94 11 554691 | பெக்ஸ் : 94 11 2554690 |
| மின்னஞ்சல் : | cecc@buildingsdept.gov.lk |



## செயலாற்றுகை


அட்டவணை 5: முன்னேற்றப் பொழிப்பு பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 1 – நிர்மாணிப்பு)

| | செயற்பணி | ஆலோசனை | கருத்திட்ட முகாமைத்துவம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிதிசார் இலக்கு (ரூபா மில்லியன்) | 109.66 | 243.71 | 1079.72 | **1433.09** |
| நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்) | 97.85 | 154.63 | 1009.20 | **1261.68** |
| பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | - | 1 | 3 | **4** |
| அமுல்படுத்தும் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | 10 | 9 | 2 | **21** |

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| புலத்சிங்கள பிரதேச செயலகத்தை நிர்மாணித்தல் | | தொடங்கொட பிரதேச செயலகத்துக்கு புதிய கேட்போர் கூடமொன்றை நிர்மாயித்தல் | |
|---|---|---|---|
| **மொத்த மதிப்பீட்டுச் செலவினம்** | மி.79.9 | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி. 98.00 |
| **சேவை பெறுநர்** | பிரதேச செயலகம், புலத்சிங்கல | சேவை பெறுநர் | மாவட்ட செயலகம், களுத்துறை |
|  | |  | |

## வலயம் 1 பராமரிப்பு

| | | |
|---|---|---|
| பிரதம் பொறியியலாளர் | பொறியியலாளர் எம். சத்யகுமார் |   |
| பிரதிப் பிரதம் பொறியியலாளர் | பொறியியலாளர் எஸ்.எம்.எம். சிறிவர்தன | |
| அலுவலகம் | பிரதம் பொறியியலாளர் (வலயம் 1 பராமரிப்பு) அலுவலகம்,<br>இல. 213,<br>ரொரின்ரன் எவனியு,<br>கொழும்பு 07 | |
| தொலைபேசி 94 11 258257994 11 554691 | பெக்ஸ் : 94 11 2588686 | |
| மின்னஞ்சல் | : cem@buildingsdept.gov.lk | |

## செயலாற்றுகை

*அட்டவணை 6: முன்னேற்றப் பொழிப்பு பிரதம பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 1 – பராமரிப்பு)*


| | செயற்பணி | ஆலோசனை | பராமரிப்பு | மேம்படுத்தல் | மறுசீரமைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நிதிசார் இலக்கு (ரூபா மில்லியன்) | 11.31 | 79.62 | 21.33 | 226.24 | 38.04 | **376.54** |
| நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்) | 12.21 | 65.00 | 24.17 | 187.88 | 36.62 | **325.88** |
| பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | 2 | - | 12 | 166 | 2 | **182** |
| அமுல்படுத்தும் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | 1 | 2 | - | 22 | 6 | **31** |

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| நிதி திட்டமிடல் அமைச்சின் அறை இலக்கம் 208 இனை மேம்படுத்தல் | | நிதி திட்டமிடல் அமைச்சின் அறை இலக்கம் 321 இனை மேம்படுத்தல் | |
|---|---|---|---|
| மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி.11.14 | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி. 17.67 |
| சேவை பெறுநர் | நிதி திட்டமிடல் அமைச்சு | சேவை பெறுநர் | நிதி திட்டமிடல் அமைச்சு |
|  | |  | |

## வலயம் 2

| | |
|---|---|
| **பிரதம் பொறியியலாளர்** | **பொறியியலாளர் திருமதி எஸ். வினோதனீ** |
| **பிரதிப் பிரதம் பொறியியலாளர்** | பொறியியலாளர் கே.திருக்குமார் |
| **அலுவலகம்** | பிரதம் பொறியியலாளர் (வலயம் 2) அலுவலகம்,<br>கரையோர வீதி,<br>குருநகர்,<br>யாழ்ப்பாணம் |
| **தொலைபேசி** 94 21 2222781 | பெக்ஸ் : 94 21 2222781 |
| **மின்னஞ்சல் :** | **cej@buildingsdept.gov.lk** |




## செயலாற்றுகை

*அட்டவணை 7: முன்னேற்றப் பொழிப்பு பிரதம பொறியியலாளர் (வலயம் 2) அலுவலகம்*

| | செயற்பணி | ஆலோசனை | கருத்திட்ட முகாமைத்துவம் | பராமரிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிதிசார் இலக்கு (ரூபா மில்லியன்) | 116.55 | 197.11 | 275.15 | - | **588.81** |
| நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்) | 104.96 | 133.13 | 262.20 | 6.15 | **506.44** |
| பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | 4 | 3 | 4 | 1 | **12** |
| அமுல்படுத்தும் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | 2 | 5 | 5 | - | **12** |

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கிளிநொச்சி மாவட்ட அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல், தொழில் திணைக்களம் | | சிறைச்சாலைகள் தொகுதியை நிர்மாணித்தல் (2 ஆம் கட்டம்) யாழ்ப்பாணம் | |
|---|---|---|---|
| **மொத்த மதிப்பீட்டுச் செலவினம்** | மி. 67.08 | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி. 317.00 |
| **சேவை பெறுநர்** | தொழில் திணைக்களம் | சேவை பெறுநர் | சிறைச்சாலைகள் திணைக்களம் |
|  | |  | |

## வலயம் 3

| | |
|---|---|
| **பிரதம் பொறியியலாளர்** | **பொறியியலாளர் ஜி.ஆர்.எஸ்.பி. கம்லத்** |
| **பிரதிப் பிரதம் பொறியியலாளர்** | பொறியியலாளர் எஸ். சுரேந்திரன் |
| **அலுவலகம்** | பிரதம் பொறியியலாளர் (வலயம் 3) அலுவலகம்,<br>கட்டிடத் திணைக்களம்,<br>குருநாகல் |
| **தொலைபேசி** : 94 37 2222197 | பெக்ஸ் : 94 37 2222437 |
| **மின்னஞ்சல்** : | **cek@buildingsdept.gov.lk** |



## செயலாற்றுகை

*அட்டவணை 8: – முன்னேற்றப் பொழிப்பு பிரதம பொறியியலாளர் (வலயம் 3) அலுவலகம்*

| | செயற்பணி | ஆலோசனை | பராமரிப்பு | மேம்படுத்தல் | மறுசீரமைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **நிதிசார் இலக்கு (ரூபா மில்லியன்)** | 167.00 | 86.86 | 11.92 | 22.86 | **3.41** | **292.05** |
| **நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்)** | 127.80 | 58.60 | 12.57 | 18.68 | **2.0** | **219.65** |
| **பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் (எண்ணிக்கை)** | 1 | 4 | 5 | 2 | **-** | **12** |
| **அமுல்படுத்தும் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள் (எண்ணிக்கை)** | 7 | 4 | - | 3 | **1** | **15** |

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| பகல்நேர பராமரிப்பு நிலையம் மற்றும் பாலர் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், அநுராதபுரம் | | இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்திற்கென ஆண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான வதிவிட கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் | |
|---|---|---|---|
| **மொத்த மதிப்பீட்டுச் செலவினம்** | மி. 33.03 | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி. 100.00 |
| **சேவை பெறுநர்** | மாவட்ட செயலகம், அநுராதபுரம் | சேவை பெறுநர் | இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகம் |
|  | |  | |

## வலயம் 4

| | | |
|---|---|---|
| **பிரதம் பொறியியலாளர்** | **பொறியியலாளர் கே.இளங்கோ** |  |
| **பிரதிப் பிரதம் பொறியியலாளர்** | பொறியியலாளர் திருமதி எஸ் துசாந்தி | |
| **அலுவலகம்** | பிரதம் பொறியியலாளர் (வலயம் 4) அலுவலகம்,<br>கட்டிடத் திணைக்களம்,<br>இங்கினியாகல வீதி,<br>அம்பாறை | |
| **தொலைபேசி : 94 63 2224490** | பெக்ஸ் : 94 63 2222437 | |
| **மின்னஞ்சல் :** **ceu@buildingsdept.gov.lk** | | |

## செயலாற்றுகை


*அட்டவணை 9: முன்னேற்றப் பொழிப்பு பிரதம பொறியியலாளர் (வலயம் 4) அலுவலகம்*

| | செயற்பணி | ஆலோசனை | கருத்திட்ட முகாமைத்துவம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **நிதிசார் இலக்கு (ரூபா மில்லியன்)** | 80.43 | 428.49 | 75.00 | **583.92** |
| **நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்)** | 39.45 | 194.81 | 69.00 | **303.26** |
| **பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் (எண்ணிக்கை)** | 4 | 26 | - | **30** |
| **அமுல்படுத்தும் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள் (எண்ணிக்கை)** | 11 | 24 | 3 | **38** |

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| புதிய சிறுவர் அரவணைப்பு நிலையத்தை நிர்மாணித்தல், அம்பாறை வைத்தியசாலை | | திருமணமான வைத்தியர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் 04 இனை நிர்மாணித்தல், அம்பாறை வைத்தியசாலை | |
|---|---|---|---|
| **மொத்த மதிப்பீட்டுச் செலவினம்** | மி. 22.64 | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி.33.08 |
| **சேவை பெறுநர்** | சுகாதார அமைச்சு | சேவை பெறுநர் | சுகாதார அமைச்சு |
|  | |  | |

## வலயம் 5


| | | |
|---|---|---|
| பிரதம் பொறியியலாளர் | பொறியியலாளர் திருமதி என்.எம்.எம். மரிக்கார் |  |
| பிரதிப் பிரதம் பொறியியலாளர் | பொறியியலாளர் திருமதி டி.சீ. விஜேசிங்க | |
| அலுவலகம் | பிரதம் பொறியியலாளர் (வலயம் 5) அலுவலகம், கட்டிடத் திணைக்களம், கண்டி | |
| தொலைபேசி : 94 81223 4255 | பெக்ஸ் : 94 81 2234255 | |
| மின்னஞ்சல் : உ_நஉ_;டிரடை_னநைபௌனநிவ.பழஎ.டம | | |

## செயலாற்றுகை


*அட்டவணை 10: முன்னேற்றப் பொழிப்பு பிரதம பொறியியலாளர் (வலயம் 5) அலுவலகம்*

| | செயற்பணி | ஆலோசனை | கருத்திட்ட முகாமைத்துவம் | பராமரிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிதிசார் இலக்கு (ரூபா மில்லியன்) | 143.81 | 116.05 | 128.84 | 33.12 | **421.82** |
| நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்) | 162.23 | 123.23 | 60.00 | 38.67 | **384.13** |
| பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | 3 | 1 | - | 13 | **18** |
| அமுல்படுத்தும் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள் (எண்ணிக்கை) | 3 | 3 | 1 | 14 | **11** |

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கண்டி மாநகர சபையின் டி.எஸ். சேனாநாயக்க நூலகத்தில் அமெரிக்க பிரிவு | | ஹந்தானை ஆரம்ப கற்கை தேசிய நிறுவகத்தின் விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் வாகனத் தரிப்பிடத்திற்கான 4 மாடிக் கட்டிடத்தை நிர்மாணிதல் | |
|---|---|---|---|
| **மொத்த மதிப்பீட்டுச் செலவினம்** | மி. 37.86 | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி. 174.00 |
| **சேவை பெறுநர்** | கண்டி மாநகர சபை | சேவை பெறுநர் | ஆரம்ப கற்கை தேசிய நிறுவகம், ஹந்தானை |
|  | |  | |

## வலயம் 6

| | | |
|---|---|---|
| **பிரதம் பொறியியலாளர்** | **பொறியியலாளர் திருமதி கே.லியனகே** |  |
| **பிரதிப் பிரதம் பொறியியலாளர்** | பொறியியலாளர் பீ.ஏ. குணவர்த்தன | |
| **அலுவலகம்** | பிரதம் பொறியியலாளர் (வலயம் 6) அலுவலகம்,<br>கட்டிடத் திணைக்களம்,<br>இல. 10, மேல் டிக்சன் வீதி,<br>காலி | |
| **தொலைபேசி** : 94 91 223 4838 | பெக்ஸ் : 94 91 223 4838 | |
| **மின்னஞ்சல்** : உ_நப;டிரடை_னவைபௌனநிவ.பழஎ.டம | | |

## செயலாற்றுகை

அட்டவணை 11: முன்னேற்றப் பொழிப்பு பிரதம பொறியியலாளர் (வலயம் 6) அலுவலகம்

| | செயற்பணி | ஆலோசனை | கருத்திட்ட முகாமைத்துவம் | பராமரிப்பு | மேம்படுத்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **நிதிசார் இலக்கு (ரூபா மில்லியன்)** | 50.00 | - | 15.00 | 29.90 | 6.96 | **236.86** |
| **நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்)** | 39.68 | - | 106.71 | 30.09 | 0.96 | **177.44** |
| **பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் (எண்ணிக்கை)** | 4 | - | 1 | 12 | - | **17** |
| **அமுல்படுத்தும் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள் (எண்ணிக்கை)** | 3 | 2 | 7 | - | 1 | **13** |

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| திக்வெல்ல வெவுருகன்னல புனித பூமியின் கீழ் மாடியில் 06 கடைகளை நிர்மாணித்தல் | | நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கு இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல், அம்பலாந்தோட்டை | |
|---|---|---|---|
| **மொத்த மதிப்பீட்டுச் செலவினம்** | மி. 10.00 | மொத்த மதிப்பீட்டுச் செலவினம் | மி. 89.01 |
| **சேவை பெறுநர்** | மாவட்ட செயலகம் - மாத்தறை | சேவை பெறுநர் | கமத்தொழில் திணைக்களம் |
|  | |  | |

## மனித வளம்

| முகாமைத்துவப் பதவியணி | அங்கீகரித்தது | தற்போது உள்ளது | வெற்றிடம் | செயற்பாட்டுப் பதவியணி | அங்கீகரித்தது | தற்போது உள்ளது | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | - | பிரதம பொறியியலாளர் | 15 | 6 | 9 |
| பதில் பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவைகள்) | 1 | - | 1 | சிரேஷ்ட கட்டிடக் கலைஞர்கள் | 2 | - | 2 |
| பதில் பணிப்பாளர் நாயகம் (ஆலோசனைச் சேவைகள்) | 1 | - | 1 | பொறியியலாளர்கள் | 70 | 37 | 33 |
| பணிப்பாளர் (பொறியியல் திட்டமிடல்) | 1 | 1 | - | கட்டிடக் கலைஞர்கள் ∴உள்ளக வரைஞர் | 12 | 10 | 2 |
| பணிப்பாளர் (கட்டிடக் கலை) | 1 | 1 | - | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 1 | - | 1 |
| பணிப்பாளர் (தொழில்நுட்ப அபிவிருத்தி) | 1 | 1 | - | நிருவாக அலுவலர் | 1 | - | 1 |
| பணிப்பாளர் (நிர்மாணம்) | 2 | 2 | - | தொழில்நுட்ப அலுவலர்கள் | 90 | 53 | 37 |
| பணிப்பாளர் (நிருவாகம்) | 1 | 1 | - | திட்டமிடல் கலைஞர்கள் | 40 | 29 | 11 |
| பணிப்பாளர் (நிதி) | 1 | 1 | - | தொழில்நுட்ப உதவியாளர்கள் | 40 | - | 40 |
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | - | கனிய அளவை உதவியாளர்கள் | 13 | 13 | - |
| பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) | 1 | 1 | - | அபிவிருத்தி அலுவலர்கள் | 37 | 32 | 5 |
| கணக்காளர் | 5 | 3 | 2 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 80 | 55 | 25 |
| **மொத்தம்** | **17** | **13** | **4** | **மொத்தம்** | **401** | **236** | 166 |
| | | | | **ஏனையன** | **180** | 134 | 46 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **581** | **தற்போது உள்ள பதவியணி** | **383** | **வெற்றிடம்** | **198** |

## மனித வளம் - சக்தி

திணைக்களத்திற்கு உரித்தான பிரதான பலமாக இருப்பது சிவில், மின்னியல் மற்றும் பொறியியல் துறையில் நிபுணத்துவம்மிக்க பட்டயம்பெற்ற பொறியியலாளர்கள், பட்டயம் பெற்ற கட்டிடக் கலைஞர்கள், உள்ளக வரைஞர்களைக் கொண்ட பல்துறைசார் தொழில்வல்லுனர்களை உள்ளடக்கிய பதவியணியினர் மற்றும் சிவில், மின்னியல் மற்றும் பொறியியல் துறையில் நிபுணத்துவம்மிக்க தொழில்நுட்ப ரீதியான பதவியணியினராகும்.

பிரதம பொறியியலாளர்கள் 06 பேர், பொறியியலாளர்கள் 37 பேர், கட்டிடக் கலைஞர்கள், உள்ளக வரைஞர்கள் 10 பேர், தொழில்நுட்ப அலுவலர்கள் 53 பேர், திட்டமிடல் கலைஞர்கள் 29 போர் மற்றும் கனியஅளவை உதவியாளர்கள் 13 பேரைக் கொண்ட பல்துறைசார் தொழில்வாண்மைக் கட்டமைப்பின் மூலம் திணைக்களமானது தொழில்சார் அடிப்படையிலான தமது சேவைகளை ஆற்றிவருகின்றது.

கட்டிடங்கள் மற்றும் அது சம்பந்தமான உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் ஆலோசனை நிறுவனம் மற்றும் ஒரே அதிகார அமைப்பாக உள்ள திணைக்களத்தின் தொழில்சார் குழுக்கள், கட்டிட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது மற்றும் கட்டிட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகளின் போது நிபுணத்துவ ஆலோசனைகைள பெற்றுக் கொடுப்பதற்காக அழைக்கப்படுகின்றனர்.

ஊழியர்களுக்கு மத்தியிலான ஒத்துழைப்பை ஊக்குவித்தலர் மற்றும் இலக்காக்க கொள்ளப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான வளங்களை சேகரிப்பதன் மூலம் விளைதிறன்மிக்க தலைமைத்துவம் வெற்றிக்கு வழிகாட்டும்.

கட்டிடத் திணைக்களத்திற்கு உரித்தானதாக நிபுணத்துவம், நிலைபேறான மற்றும் பூரணமான செயல்ரீதியான தலைமைத்துவம் இருப்பதுடன், அவ்வாறில்லாத பட்சத்தில் இவ்வாறானதொரு முன்னேற்றத்தை அடைந்துகொண்டிருக்க முடியாது.

தனியார் துறை மற்றும் வெளிநாடுகளில் காணப்படுகின்ற கடுமையான கேள்வி காரணமாக தொழில்நுட்பப் பதவியணியினர் திணைக்களத்தில் நிலைத்திருப்பதன் உறுதியற்ற தன்மையை திணைக்களம் எதிர்கொள்ளும் ஒரே சவாலாகக் கருத முடியும்.

நிறுவனத்தின் வளர்ச்சி, வினைத்திறன் மற்றும் விளைதிறன் மற்றும் சேவை ஆற்றலை துரிதப்படுத்துகின்ற தொழில்நுட்ப ரீதியிலான நிபுணத்தைக் கொண்ட அவ்வாறான தொழில்சார் பதவியணியினருக்கு ஏதேனுமொரு வகையிலான ஊக்குவிப்பு முறை அல்லது பணிக்கொடை முறை அமுல்படுத்தப்படுமாயின் அவர்களைத் திணைக்களத்தில் தொடர்ந்தும் வைத்திருப்பதை யதார்த்தமாக்கிக் கொள்ள முடியும்.

## பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் கூற்று

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

**பொறுப்பு**

கட்டிடத் திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வின் மூலம் திணைக்களத்தின் வகைப்பொறுப்புக் கூறுவது மேம்படுத்தல் மற்றும் பெறுமதிசேர்ப்பதற்காக சுயாதீனமான மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

**நோக்கங்கள்**

1. திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் விளைத்திறனை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தல்.
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஊடாக உள்ளக கணக்காய்வை வலுவூட்டல்.
3. விசேட பரிசோதனை நடவடிக்கைகளின் மூலம் திணைக்களத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்துக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.
4. மீளாய்வு ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கணக்காய்வு திட்டத்திற்கு அமைய கணக்காய்வை மேற்கொண்டு உயர் மட்ட முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல்.

**பணிகள்**

2008.01.25 ஆம் திகதிய 08.∴00200.∴306.∴012ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய தாபிக்கப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் னுஆயு.∴2009 (1) மற்றும் 2009.06.09 ஆம் திகதிய சுற்றறிக்கையின் அறிவுரைகள் மற்றும் 2014.09.09 ஆம் திகதிய அரசாங்க கணக்குகள் குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய 2015 யூன் மாதம் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டது.

**2015.12.31 ஆம் திகதிக்கு பதவியணியினர்**

| பதவி | நிரந்தர பதவியணி எண்ணிக்கை |
|---|---|
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் (இ.க.சே.) | 01 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| அலுவலக சிற்றூழியர் | 01 |

பௌதீக செயலாற்றுகை

1. மீளாய்வு ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
2. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் 25 சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளின் பொழிப்புப் பிரதிகள் மூன்று மாதங்களுக்கு ஒருதடவை அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
3. மீளாய்வு ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தொடர்கள் 04 நடாத்தப்பட்டுள்ளன.

# தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

**தலைப்பு 309 - கட்டிடங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 309 - கட்டிடங்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 17 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 345.30 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 338.96 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 6.34 மில்லியன் அதாவது 1.84 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 292.90 | 286.73 | 6.17 | 2.11 |
| மூலதன | 52.40 | 52.23 | 0.17 | 0.32 |
| மொத்தம் | 345.30 | 338.96 | 6.34 | 1.84 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 30901 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 20.87 | 13.40 | 11.87 | 14.73 | 75.00 | 44.07 |

**2.3 கட்டுநிதிக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ்வரும் 7000/0000/00/0067/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 2.22 மில்லியனாகும்.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ்வரும் 03 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 845.93 மில்லியனாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0016/0033/000 | 112.81 |
| 6000/0000/00/0013/0052/000 | 732.37 |
| 6000/0000/00/0002/0012/000 | 0.75 |
| மொத்தம் | **845.93** |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

கட்டிடங்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

திணைக்களத்தால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பாதீட்டு முரண்கள்

05 செலவின விடயங்களுக்காக மிகையாக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 21 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

30901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 01 வருடத்திற்கு மேற்பட்ட மற்றும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 335,530 கூட்டுமொத்தமான இரண்டு நிலுவைக் கடன் மீதிகளை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 50.86 மில்லியன் தொகையான 03 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கிடையே பின்வரும் செயற்திட்டங்களில் எந்தவொரு செயல் முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டத்தின் வகை | மதிப்பிடப்பட்ட செலவு | அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை | அமுல்ப்படுத்தப்படாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையின் சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | |
| Turnkey | 85.36 | 13 | 25.4 |
| Consultancy | 83.44 | 18 | 23.6 |
| Project Managment | 209.9 | 05 | 20.4 |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2014 ஒக்தோபர் 21 ஆந் திகதிய PRE/2014/TR-01 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சற்றறிக்கையின் பிரகாரம் தேர்தல்கள் கடமைகளுக்காக விடுவிக்கப்படாத குழாம் வாகனமொன்று திணைக்களத்தின் உத்தியோகத்தருக்கு தேர்தல் கடமைகளுக்காக எடுத்துச் செல்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 சனவரி 07 ஆந் திகதி இடம் பெற்ற விபத்தை அடுத்து பழுதுபார்த்தலுக்காக ரூபா 112,992 தொகை திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது. அந்த வாகனத்தை தேர்தல் கடமைக்காக ஈடுபடுத்திய உத்தியோகத்தர் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியின் கடமைகளை மேவுகை செய்யும் உத்தியோகத்தராக இருந்ததுடன், மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்காக அந்த உத்தியோகத்தர் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளையும் பெற்றிருந்தார். அவ்வாறான படிகளைப் பெறுகின்ற உத்தியோகத்தருக்கு குழாம் வாகனத்தைப் பயன்படுத்தும் இயலுமை இல்லாதிருந்த போதும் மேற்கூறப்பட்ட நட்டத்தை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 நட்டமும் இழப்பும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 யூலை 19 ஆந் திகதி திணைக்களத்திற்குரிய வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டஇழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது ரூபா 247,000 தொகையான நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு திணைக்களத்தின் தலைவர் சிபாரிசு செய்திருந்தார்.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்களை கைதவிர்க்கும் போது உத்தியோகத்தர்கள் உரிய கவனத்துடன் செயற்படாமையினால் திணைக்களத்திற்கு ரூபா 322,050 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 116 | 66 | 50 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 23 | 05 | 18 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 281 | 179 | 102 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 178 | 123 | 45 | - |
| (v) | ஏனைய (அமைய / தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 23 | - | 23 |
| | மொத்தம் | **598** | **421** | **193** | **23** |